## COLLEGE UNION

### REPORT OF THE ACTIVITY

On 19/12/2019, to ensure the safety of a women, an awareness programme was organised in which "Kavalan SOS" app was introduced to the students of our College by Ranipet DSP Mrs. Geetha and S. Balu, Superintendent of Police.The guidelines and the advice given by them made an effective mark in the minds of our college students to protect oneself in hard times.



# காவலன் செயலியை அனைத்து பெண்களும் பதிவிறக்கம் செய்யலாம்

**டிஎஸ்பி தகவல்**

வாலாஜா அரசினர் பெண்கள் கல்லூரியில் நேற்று காவல்துறை சார்பில் காவலன் செயலி விளக்க கூட்டத்தில் டிஎஸ்பி கீதா பேசினார். இதில் பங்கேற்ற மாணவிகள்.

வாலாஜா, டிச.20–
காவலன் செயலியை அனைத்து பெண்களம் பதிவிறக்கம் செய்யலாம் என்று ராணிப்பேட்டை டிஎஸ்பி கீதா தெரிவித்தார்.

தமிழக காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பிற்காக காவலன் செயலி கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதை தமிழகத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவிகளிடம் அறிமுகப்படுத்தி, விளக்குவதற்காக காவல்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

அதன்படி ராணிப்பேட்டை மாவட்டத்தில உள்ள வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி மாணவிகளுக்கு காவலன் செயலி விளக்க கூட்டம் கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) அனுராதா தலைமை தாங்கினார். வாலாஜா இன்ஸ்பெக்டர் பாலு வரவேற்றார்.

இதில்ராணிப்பேட்டை டிஎஸ்பி கீதா கலந்து கொண்டு பேசியதாவது:

நாட்டில் அவ்வப்போது நடைபெற்று வரும் வன்கொடுமைகள், பாலியல் பலாத்காரங்கள் ஆகியவற்றில் இருந்து பெண்கள் தற்கொள்ள பல்வேறு விழிப்புணர்வு கூட்டங்கள் அரசு சார்பில் நடைபெற்றுவருகிறது. குறிப்பாக தமிழகத்தில் உள்ள பெண் குழந்தைகள், சிறுமிகள், இளம்பெண்கள், பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் முதியவர்கள் ஆகியோரை பாதுகாக்கும் பொருட்டு காவலன் எஸ்ஓஎஸ் என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டது. இந்த செயலியை அனைத்து மாணவிகளும் தங்கள் செல்போனில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இந்த செயலி மிகவும் எளிமையானது. யாருடைய துணையும் இன்றி ஆண்ட்ராய்டு மொபைல்களில் பிளே ஸ்டோரில் சென்று பதவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆபத்துக்காலத்தில் காவலன் செயலில் உள்ள சிகப்பு நிறத்தில் உள்ள ஆப்ஸை அழுத்தினால் போதும். உடனே ஜிபிஆர்எஸ் மூலம் காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வந்துவிடும். உடனடியாக போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து ஆபத்தில் உள்ள பெண்களை காப்பாற்றுவார்கள். மாணவிகளாகிய நீங்கள் இந்த காவலன் செயலி குறித்து தங்கள் பகுதியில் உள்ள அனைத்து பெண்களுக்கும் விளக்க வேண்டும். அவர்களுக்கும் பதிவிறக்கம் செய்து கொடுங்கள். இதேப்போல் அனைத்து பெண்களும் காவலன் செயலியை பதிவிறக்கம் செய்து பயனையடை வேண்டும்.

இதன்மூலம் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அனைத்து பெண்களுக்கும் ஏற்படும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்தக்கூட்டத்தில் திரளான மாணவிகள் கலந்து கொண்டனர். பின்னர் மாணவிகளின் காவலன் செயலி குறித்த சந்தேகங்களுக்கு டிஎஸ்பி கீதா பதில் அளித்தார்.

வேலூர் மாவட்டத்தில்

